**வாக்குமூலம்**
**சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம்.**
**M.C.O.P.No.288/2022**
**வழக்கு சாட்சி P.W.2**
**1873ம் ஆண்டின் 10வது விதியின்படி திரு.K.கார்த்திக் அவர்களால் திறந்த நீதிமன்றத்தில் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : பஞ்சவர்ணம் | தொழில் | : இல்லத்தரசி |
| தகப்பனார் பெயர் | : மாயப்பன் | கணவர் பெயர் | : நாச்சிமுத்து |
| கிராமம் | : நாகனம்பட்டி | வயது | : சுமார் 56 |
| தாலுக்கா | : ஒட்டன்சத்திரம் | நாள் | : 08.04.2026 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | | |

**<u>2–வது எதிர்மனுதாரர் தரப்பில் மேற்கொள்ளப்படும் குறுக்கு விசாரணை</u>**

இந்த விபத்து சம்மந்தமாக எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது என்றால் ? சரிதான். விபத்து சம்மந்தமாக ஏற்கனவே எனது கணவர் நாச்சிமுத்து என்பவரிடம் இவ்வழக்கு குறுக்கு விசாரணை மேற்கொண்ட விபரம் எனக்கு தெரியும் என்றால் ? சரிதான். 2014 ம் ஆண்டு முதல் 2017ம் ஆண்டு வரை விபத்து காயங்களுக்காக தொடர் சிகிச்சை பெற்றதற்கான ஆவணங்கள் இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் ? ஏற்கனவே எனது கணவர் இருந்த போது தாக்கல் செய்யப்பட்டுள்ளது. நான் சொல்வது தவறு என்றாலும், நான் எவ்வித ஆவணங்களும் தாக்கல் செய்யாமல் தாக்கல் செய்துள்ளதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் ? சரியல்ல. 24.11.2017ம் தேதியில் ASPIRATION PNEUMEONIA IN RESPIRATORY FAILURE என்று மருத்துவர் சிகிச்சை விபரத்தில் குறிப்பிட்டுள்ள நிலையில் மருத்துவரின் ஆலோசனையின் படி நடந்து கொள்ளால் 28.11.2017ம் ஆண்டு டிஸ்சார்ஜ் செய்யப்பட்டுள்ளார் என்றால் ? சரிதான். எங்களது வேண்டுகோளின் படி டிஸ்சார்ஜ் செய்து கொண்டோம் என்றால் ? சரிதான். விபத்து காயத்திற்கும் கடந்த 2017ம் ஆண்டு சிகிச்சைக்கு சென்றதற்கும் எந்தவித சம்மந்தம் இல்லை என்றால் ? சரியல்ல. எனது கணவர் எனது வீட்டில் வைத்து தான் இறந்தார் என்றால் ? மாலை 05.00 மணிக்கு

டிஸ்சார்ஜ் செய்து வீட்டிற்கு வந்த பிறகு மாலை 07.00 மணிக்கு வீட்டில் வைத்து இறந்தார். எனது கணவர் இறந்த பிறகு விபத்து காயங்களுக்காக இறந்தார் என்று சடலக்கூறாய்வு எதுவும் மருத்துவமனை சென்று மேற்கொள்ளவில்லை என்றால் ? சரிதான். அதேபோல் எனது கணவர் விபத்தில் தான் இறந்தார் என்று காவல் நிலையம் சென்று சட்டப்பிரிவை மாறுதல் செய்ய நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை என்றால் ? சரிதான். 07.08.2015ம் தேதி மருத்துவமனையில் எடுக்கப்பட்ட Ultra sound Scan அறிக்கையில் Prostate size and PVR (Incontintent Patient) என்று உள்ளதற்கும், விபத்து காயத்திற்கும் எந்தவித சம்மந்தம் இல்லை என்றால் ? சரியல்ல. விபத்து காயத்திற்காக 2016ம் ஆண்டு வரை எனது கணவர் துப்புரவு பணியாளராக பணிக்கு சென்று வந்துள்ளார் என்றால் ? சரியல்ல. விபத்து ஏற்பட்ட பிறகு எனது கணவர் வேலைக்கு செல்லவில்லை. நான் சொல்வது தவறு என்றாலும், எனது கணவர் இந்நீதிமன்றத்தில் அளித்த சாட்சியத்தில் 2016ம் ஆண்டு பிப்ரவரி மாதம் வரை பணிக்கு சென்று வந்ததாக சாட்சியம் முன்னிலைப்படுத்தியுள்ளதற்கு மாறாக நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் ? சரியல்ல. எனது கணவருக்கு விபத்து ஏற்பட்டபிறகு, இறக்கும் நாள் வரை எனது கணவர் வேலைக்கு செல்லவில்லை என்றும், வேலைக்கு செல்லாத காரணத்தினால் சம்பளம் எதுவும் பெறவில்லை என்றும் சான்று எதுவும் பெற்று நீதிமன்றத்தில் தாக்கல்செய்யவில்லை என்றால் ? இல்லை. எனது கணவர் விபத்து காயங்களுக்காக இறக்காத காரணத்தினால் மருத்துவ பில்கள் மட்டுமே கிடைக்கத்தக்கது என்றாலும், எனது கணவர் இறந்ததற்கான இழப்பீடு கிடைக்கத்தக்கது அல்ல என்றாலும் ? சரியல்ல. விபத்து காயங்களினால் இறந்ததாக நான் கேட்டுள்ள தொகை எனக்கு கிடைக்கத்தக்கது அல்ல என்றால்? சரியல்ல.

C JAYAPPRAKASH

Digitally signed by C JAYAPPRAKASH
Date: 2026.04.08 18:24:58 +0530

சார்பு நீதிபதி

ஒட்டன்சத்திரம்